செய்யும்பொழுது ஜெர்மன் ரிவால்வர் இல்லையே தவிர, அவர் ஆதினகர்த்தராக இருப்பதன் காரணமாக, அவர் திருக்கயிலாய பரம்பரையைச் சேர்ந்தவர் என்பதன் காரணமாக, அவரது சொற்களை நாம் நம்ப வேண்டியிருக்கிறது. ஆகவே, ஜெர்மன் ரிவால்வர் இருக்கிறது, 302 இருக்கிறது என்று சொல்லும் பொழுது நீ ஏன் பார்க்காமல் விட்டாய் என்று கேட்பார்கள். இப்பொழுது பார்க்கும்பொழுது ஏர் கன் இருக்கிறது, கைப்பற்ற பொருட்களை ஒப்படைத்திருக்கிறோம். (குறுக்கீடு) அதற்கான

(முற்பகல் 10—50)

சட்ட திட்டங்களின்படியும், சிலபல விதிகளின் படியும் அப்படிப்பட்ட வழக்குகளைத் தொடர்ந்து இருக்கிறார்கள். அந்த வழக்கு பற்றி விசாரிக்கும் போதுதான் உண்மைகள் தெரியும். எனவே இதிலே காழ்ப்புணர்ச்சி ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே இத்தகைய நிலைமைகள் எல்லாம் விளக்கப்பட்டுவிட்டதன் காரணத்தால் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இது குறித்து மேற்கொண்டு விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்ற கருத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

4. அறிவிப்புகள்.

(அ) அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மைத் தெரிவிக்கும் தீர்மானம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம். பேரவையின் 71-வது விதியின் கீழ், கிழக்கண்ட மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்து அரசு மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும்தீர்மானத்திற்கான முன்னறிவிப்புகள் வந்துள்ளன என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவாளர்கள் : என். சங்கரய்யாரா. உமாநாத், ப. நெடுமாறன், இரா. கருப்பையா, மு. அம்பிகாபதி, பொ. உத்திராபதி, என். ஏ. பூங்காவனம், தி. கா. நல்லப்பன், செ. சிவசாமி, எம். ஆறுமுகம், சோ. அழகர்சாமி, அன்பில் தர்மலிங்கம்;

இம்மாதிரி ஒரு தீர்மானத்திற்கான முன்னறிவிப்பு வரப் பெற்றால், பேரவையின் விதி 71, (2)-ன்படி, பேரவைத் தலைவர் அத்தீர்மானத்தின் முன்னறிவிப்பைப் பேரவைக்குப் படித்துக் காட்டி, அத் தீர்மானத்தை முன்மொழிய அந்த உறுப்பினருக்கு பேரவை அனுமதி அளிக்கிறதா என்று அறிய வேண்டும். ஒன்றிற்கு மேற்பட்ட முன்னறிவிப்புகள் வரப் பெற்றால், அவை வரப்பெற்ற தேதி, நேரத்தின்படி வரிசைப்படுத்தி, முதலில் முன்னறிவிப்புக் கொடுக்கப்பட்டதை எடுத்துக்கொள்ளவேண்டும்.

எனவே, மேலே குறிப்பிட்ட முன்னறிவிப்புகளில் திரு. என். சங்கரய்யா மற்றும் திரு. உமாநாத் ஆகிய இருவரும் கையெழுத்திட்டுக் கொடுத்துள்ள தீர்மானத்திற்கான முன்னறிவிப்புதான் முதலில் வந்தது. எனவே அந்த தீர்மானத்திற்கான முன்னறிவிப்பைப் பேரவைக்குப் படிக்கிறேன்.

"தமிழக சட்டப் பேரவை விதிகளின், விதி-71, உட்பிரிவு 1-ன் கீழ், கீழ்க்காணும் தீர்மானத்தை அவையில் பிரேரேபிக்க இத்துடன் அறிவிப்பு தருகிறேன்:—

"திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களின் தலைமையில் செயல்படும் அமைச்சரவை மீது இப்பேரவைக்கு நம்பிக்கை இல்லை". (ஒப்பம்) என். சங்கரய்யா, ரா. உமாநாத்.

திரு. ரா. உமாநாத் அவர்கள் இந்தத் தீர்மானத்தை முன்மொழிய பேரவை அனுமதி அளிக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். அனுமதி அளிக்கலாம் என்று கருதும் மாண்புமிகு உறுப்பினர்களைத் தம் இருக்கையில் எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

24 மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மேல் எழுந்து நிற்பதால், பேரவை விதி 71 (2)-ன் கீழ், தீர்மானத்தை முன்மொழிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. உமாநாத் அவர்களுக்கு பேரவை அனுமதி அளிக்கின்றது என்று அறிவிக்கிறேன். இந்தத் தீர்மானம் 8-11-1983 செவ்வாய்க்கிழமையன்று விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

5. கவன ஈர்ப்புகள்.

(அ) நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்கள்.

திரு. செ. செம்மலை: தலைவர் அவர்களே, "கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம், பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலிருந்து, நிர்ணயிக்கப்பெற்ற சதவீத லாபத்தைவிட குறைவான வீதத்தில் கொள்முதல் செய்வதாலும், குறிப்பிட்ட காலத்தில் கொள்முதல் செய்யத் தவறிவிடுவதால், சங்கங்களில் துணிகளின் தேக்கம் ஏற்படுவதாலும், கோ-ஆப்டெக்ஸிலிருந்து கொள்முதலுக்கான தொகையைப் பெறுவதில் காலதாமதம் ஏற்படுவதாலும், தமிழ்நாடு முழுவதும் உள்ள நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் படும் இன்னல் குறித்து" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.